மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். திரு. ஆறுமுகம்.

முற்பகல் 10–55

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அமையவிருக்கிற அந்த மோட்டார் வண்டி துணை பாகம் தயாரிக்கும் தொழிற்சாலை எங்கள் ஊருக்கு அருகிலேயேதான் வர இருக்கிறது. அதிலே அந்த மோட்டார் வாகன துணை பாகம் உற்பத்தி மட்டும் வருகிறதா? (குறுக்கீடு) இல்லை, அதிலே பல்வேறு கம்ப்யூட்டர் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் வர இருப்பதாகச் சொல்கிறார்கள். அவை இரண்டும் இணைந்து வருகின்றனவா அல்லது வேறு தொழிற்சாலைகள் வர அங்கே வாய்ப்பு இருக்கிறதா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற் பூங்கா அமையவிருக்கிற இடத்தில்தான் அவர்களுக்கு தனித்தனியாகக் குறிப்பிட்ட ஏக்கர்களைப் பிரித்துக் கொடுத்து, அந்த இடத்திற்குள்ளாகத்தான் அந்தத் தொழிற்சாலை வர இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *333*, திரு. என். ரெங்கநாதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

333—

நெற்களம்

***35814—திரு. என். ரெங்கநாதன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, காளஹஸ்தினாபுரத்தில் நெற்களம் ஒன்று அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய நிதிநிலைமைக்கு ஏற்றவாறு பூம்புகார் தொகுதி, காளஹஸ்தினாபுரத்தில் வேளாண்மை விற்பனைக் குழுமூலமாக நடப்பு நிதியாண்டில் உலர்களம் அமைக்க ஆய்வு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

2005 ஏப்ரல் 11]

திரு. என். ரெங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டிருந்த வினாவிற்கு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவதாகச் சொல்லியிருக்கிறார். ஆகையால், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 334, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

334—

மாணவர் விடுதி

***42098—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், அத்திப்பாடி ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவர் விடுதி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், அத்திப்பாடி ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவர் விடுதி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், அத்திப்பாடி கிராமம் என்பது கிருஷ்ணகிரி மாவட்டத்தினுடைய ஒரு கடைக்கோடி பகுதியாகும். அங்கே அரசு உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கு அரசு விடுதி அமைக்கும் திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டத்தில் ஊத்தங்கரையிலேயே பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளியினுடைய